සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]



ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2013 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2013 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2013

නව නිර්දේශය
புதிய பாடத்திட்டம்
New Syllabus

සන්නිවේදනය හා මාධ්‍ය අධ්‍යයනය I
தொடர்பாடலும், ஊடகக் கற்கையும் I
Communication and Media Studies I

29 T I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
Two hours

**அறிவுறுத்தல்கள்:**

- ✻ ***எல்லா*** வினாக்களுக்கும் விடை எழுதுக.
- ✻ விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது ***சுட்டெண்ணை எழுதுக.***
- ✻ விடைத்தாளின் பிற்பக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசிக்க.
- ✻ **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என எண்ணிடப்பட்ட விடைகளில் ***சரியான*** அல்லது ***மிகப் பொருத்தமான*** விடையைத் தெரிந்தெடுத்து, ***அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய*** விடைத்தாளில் ***புள்ளடி*** (X) இடுவதன் மூலம் காட்டுக.

1. தொடர்பாடல் என்பது ஒரு தொடர்ச்சியான செயன்முறை என விளக்கம் தந்தவர்
   (1) வில்பர் ஷ்ராம் (2) ஹரோல்ட் டீ. லாஸ்வெல் (3) டேவிட் கே. பெர்லோ
   (4) ஷெனொன் மற்றும் வீவர் (5) எட்வேர்ட் சபீர்

2. தொலைபேசி வழிப்பாதையின் ஒரு முனையிலிருந்து வரும் செய்தி அடுத்த முனையில் ஒலி வெளிப்பாடாக அமைவதை அடையாளப்படுத்துவது
   (1) கடத்துதல் (transmission)
   (2) பார்வை நோக்கு (perception)
   (3) குறிமுறை (coding)
   (4) குறிமுறையாக்குதல் (encoding)
   (5) குறிமுறையவிழ்த்தல் (decoding)

3. சமூக வானொலி ஒலிபரப்பு ஒரு நாட்டின் அபிவிருத்திக்கு முக்கியமானது. தற்போது இலங்கையில் சமூக வானொலி ஒலிபரப்பு இடம்பெறும் இடம்
   (1) ரஜரட்ட (2) யாழ்ப்பாணம் (3) வயம்ப
   (4) ஊவா (5) மகாநுவர

4. தாமதமான பின்னூட்டம் அதிகளவில் காணக்கிடைப்பது
   (1) ஆளிடைத் தொடர்பாடலில் (2) தனியாள் (அகமுகி) தொடர்பாடலில்
   (3) வெகுசனத் தொடர்பாடலில் (4) கூட்டுத் தொடர்பாடலில்
   (5) வாய்மொழியல்லாத் தொடர்பாடலில்

5. தொடர்பாடல் செயன்முறையின் உள்ளடக்கம் (content) என்பது
   (1) தொடர்பாடல் சந்தர்ப்பம் (2) விளைவு (3) பார்வையாளர்
   (4) செய்தி (5) ஊடகம்

6. ஆக்கத் தொடர்பாடல் செய்தி ஒன்று தயாரிக்கப்படும்போது நாட்டாரியல் பற்றிய கற்கை மிகவும் அவசியமானது. ஏனெனில்
   (1) பாராட்டைப் பெறுவதற்காகும்.
   (2) வெகுசன உணர்வை அடையாளம் காண்பதற்காகும்.
   (3) அது ஒழுக்கநெறியின் அடிப்படையிலானது ஆகும்.
   (4) அது காலத்தின் தேவையாகும்.
   (5) அதன் உண்மையான இயல்புகளை அறிவதற்காகும்.

7. ஒரு படைப்பாக்க எழுத்தாளர் தனக்கேயுரிய அடையாளத்தை மிகவும் பொருத்தமாக வெளிப்படுத்த முடிவது
   (1) நாவல்களை எழுதும்போது
   (2) மேடை நாடகங்களுக்கான எழுத்துருக்களை எழுதும்போது
   (3) தொலைக்காட்சி நாடகங்களுக்கான எழுத்துருக்களை (scripts) எழுதும்போது
   (4) திரைப்பட எழுத்துருக்களை எழுதும்போது
   (5) மெய்மைக் காட்சிகளுக்கான (reality shows) எழுத்துருக்களை எழுதும்போது

[பக். 2 ஐப் பார்க்க

8. தொடர்பாடலின் செயற்பாடுகளைக் கற்கும்போது, அதன் **பொருத்தமற்ற** வெளிப்பாடொன்றைக் கொண்டிருக்கும் குழுவைப் பெயரிடுக.
   (1) தகவல் அளித்தல், சமூகமயமாதல், பண்பாட்டு முன்நகர்வு (cultural promotion).
   (2) பொழுதுபோக்களித்தல், தன்வயப்படுத்துதல், விவாதமும் கலந்துரையாடலும்.
   (3) சமூகமயமாதல், தகவல் அளித்தல், ஊடகக் கல்வியறிவு (media literacy).
   (4) சமூக ஒருங்கிணைவு, தன்வயப்படுத்துதல், பொழுதுபோக்களித்தல்.
   (5) பொழுதுபோக்களித்தல், சமூகமயமாதல், தன்வயப்படுத்துதல்.

9. நுளம்புகளால் பரவக்கூடிய நோய்களைப் பற்றிய விவரணப் படம் ஒன்று குறித்த ஒரு பிரதேசத்தில் காட்சிப் படுத்தப்பட்டபோது, நுளம்பு ஒன்றின் அணுக்கப்படம் (close-up) ஒன்றைக் கண்ட மக்கள், அவ்வாறான பெரிய நுளம்புகள் தமது பகுதியில் இல்லையெனத் தெரிவித்தனர். இந்த வெளிப்பாடு எடுத்துக்காட்டுவது
   (1) எழுத்துருவின் பலவீனம்
   (2) மக்களின் ஊடகக் கல்வியறிவு போதாமை
   (3) மக்களின் சுகாதாரக் கல்வி பற்றிய அறிவு போதாமை
   (4) ஒலி-காட்சிப்புல ஊடகங்களின் பலவீனம்
   (5) ஒளிப்படக் கருவிகளைப் பயன்படுத்துவது பற்றிய அறிவு போதாமை

10. ஒரு பண்ணையின் விளைச்சலில் பூச்சிகளால் பரவக்கூடிய ஒரு நோயைத் தடுப்பதற்கு விவசாய அதிகாரிகளால் பின்பற்றக்கூடிய மிக வினைத்திறனுள்ள வழிமுறையாக அமைவது
   (1) வெகுசன ஊடகங்கள் வழியாகக் கலந்துரையாடல்களை ஒலி/ஒளி பரப்புவது
   (2) ஆலோசனைக் கையேடு ஒன்றை அச்சிடுவது
   (3) சுவரொட்டிகள் மற்றும் கைப்பிரதிகள் வழியாக அறிவை வழங்குவது
   (4) களங்களுக்கு விஜயம் செய்து, அறிவுறுத்தல் கலந்துரையாடல்களை மேற்கொள்வது
   (5) கருத்துப் பரிமாற்றத்திற்கான அமைவு ஒன்றைத் திட்டமிடுவது

11. தொடர்பாடல்களின் வகைகள் வகை பிரிக்கப்படும்போது அடிப்படையாக அமைவது
   (1) செயன்முறையின் நோக்கம்
   (2) அமைப்பொழுங்குத் திறன்கள்
   (3) உள்ளடங்கும் ஊடகங்களின் எண்ணிக்கை
   (4) கால வரையறை
   (5) பெறுநர்களின் எண்ணிக்கை

12. ஒரு செய்திப் பத்திரிகையொன்றின் ஆசிரியரை வந்தடைந்த கட்டுரையொன்றில் கீழ்வரும் வாக்கியங்கள் காணக்கிடைக்கப்பெற்றன. இவற்றில் மீளமைக்கப்படத் தேவை **இல்லாத** வாக்கியம்
   (1) புயலும் காற்றும் அங்கு பேரழிவை உருவாக்கியது.
   (2) எதிர்த்தரப்பினரின் குற்றச்சாட்டை நிராகரித்தார் அமைச்சர்.
   (3) எண்பது சதவிகித மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்றவில்லை.
   (4) எந்தவொரு மனிதர்களும் அங்கு காணப்படவில்லை.
   (5) அமைதியும் சமாதானமும் நாட்டின் வளர்ச்சிக்கு இரு கண்கள்.

13. பண்பாட்டுப் பரிமாற்றத்தில் (cultural exchange) காணக் **கிடைக்காதது**
   (1) ஒரு சமூக மாற்றம்
   (2) திட்டப்படி நடப்பது
   (3) திட்டமின்றியே நடப்பது
   (4) வன்மையான சமூக மரபுகள் இருத்தல்
   (5) சமூக ஒருங்கிருத்தலுக்குப் (social co-existance) பங்களித்தல்

14. நியம மொழிகளின் பொதுவான இயல்பு
   (1) பின்பற்ற வேண்டியவைகளை மீறல்
   (2) வளர்ச்சி இடம்பெறாமை
   (3) ஏற்றுக்கொள்ளப்பட்ட மரபுகளின்படி இயங்குதல்
   (4) இயல்பான நடத்தைகளைக் கொண்டிருக்காமை
   (5) பிரயோக நடத்தைகளில் கவனம் கொண்டிருத்தல்

15. விளைதிறன்மிக்க தொடர்பாடல் ஒன்றுக்கு ஆகக் **குறைந்த** முக்கியத்துவமாக இருப்பது
   (1) பெறுநர்கள் பற்றிய அறிவு
   (2) சந்தர்ப்பத்திற்கு இசைவான செய்தி பற்றிய ஆய்வு
   (3) பண்பாடு மீதான கவனம் செலுத்துகை
   (4) அனுபவங்களின் பொதுப்பரப்பு பற்றிய கவனம்
   (5) தொடர்பாடல் தொழினுட்பங்கள் பற்றிய அறிவைக் கொண்டிருத்தல்

[பக். 3 ஐப் பார்க்க

0393



16. ஜோன் மில்ட்டன், ஜோன் லொக், தோமஸ் ஜெவ்வர்சன், ஸ்ருவர்ட் மில் ஆகியோரின் சிந்தனைகள் கலந்துரையாடப்படுவது
    (1) அதிகார ஆதிக்கக் கோட்பாட்டில்
    (2) சோவியத் கம்யூனிஸ்ட் கோட்பாட்டில்
    (3) சமூகப் பொறுப்புகள் கோட்பாட்டில்
    (4) தாராண்மைவாதக் கோட்பாட்டில்
    (5) புரட்சிவாதக் கோட்பாட்டில்

17. மரபுசார்ந்த சமூகம் ஒன்றின் பண்பாட்டுச் சிறப்புகளைப் பிரதிநிதித்துவப்படுத்துவது
    (1) உலகப் பண்பாடு
    (2) வெகுசனப் பண்பாடு
    (3) நாட்டாரியற் பண்பாடு
    (4) பிரசித்த பண்பாடு
    (5) செம்மைப் பண்பாடு (classical culture)

18. ஒரு விரிவுரை ஒன்றைச் செவிமடுத்த ஒரு தொகுதி மாணவர்கள் ஏதாவது அறிவை அதன் மூலம் பெற்றுக் கொண்டனரா என்பதைத் தெரிந்துகொள்ள முயற்சித்தபோது, 50% மாணவர்கள் அதன் உள்ளடக்கத்தைச் சரிவரப் புரிந்துகொள்ளாதிருந்தது தெரியவந்தது. இந்தச் சூழ்நிலையைச் சிறப்பாக விளக்க முடிவது
    (1) ஊடகக் கல்வியறிவு ஊடாக
    (2) பார்வை நோக்கு ஊடாக
    (3) சமூக ஒருங்கிணைவு ஊடாக
    (4) ஊடகப் பண்பாடு ஊடாக
    (5) உளநிலை ஆய்வு ஊடாக

19. நாட்டாரியல் ஊடகம் (folk media) தொடர்பில் **பொருத்தமற்ற** கூற்றைத் தெரிக.
    (1) பெரும்பாலும் வாய்மொழி வழியானது.
    (2) தலைமுறை தலைமுறையாக வந்து சேர்வது.
    (3) ஒரேயொரு வடிவத்தை மட்டும் உடையது.
    (4) வழக்கமாக யாரால் பிறப்பிக்கப்பட்டது என்பது தெரிய முடியாதது.
    (5) சமூகமயமாதலுக்கான ஒரு முகவர்.

20. பாடசாலையில் நடைபெறவுள்ள இரத்ததான முகாமில் முன்னாள் மாணவர்களின் உச்சமான பங்கேற்பு அவசியம் என பாடசாலை அபிவிருத்திச் சங்கக் கூட்டத்தில் அதிபர் தெரிவித்தார். இதனைத் தெரியப்படுத்துவதற்கு முக்கியத்துவம் **குறைந்த** வழிமுறையாக அமைவது
    (1) பாடசாலை அறிவித்தற் பலகையில் அறிவிப்பொன்றை விடுத்தல்
    (2) பாடசாலையின் முன்னாள் மாணவர்களுக்கு கடிதங்களை அனுப்புதல்
    (3) பத்திரிகை அறிவிப்பொன்றை விடுத்தல்
    (4) அப்பகுதியில் சுவரொட்டிகளை ஒட்டுதல்
    (5) குறுஞ்செய்திகளை (SMS) முன்னாள் மாணவர்களுக்கு அனுப்புதல்

21. வரள் வலயமொன்றின் கிராமப் பகுதிகளில் சூரியக் கலங்கள் (solar cells) மூலம் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் திட்டமொன்றிற்கு மிகப் பொருத்தமான தொடர்பாடல் வழிமுறையாக அமைவது
    (1) புதிய ஊடகத்தைப் (new media) பயன்படுத்துதல்
    (2) வானொலி நிகழ்ச்சிகளை ஒலிபரப்புதல்
    (3) செய்திப் பத்திரிகை இணைப்பிதழ்களை வெளியிடுதல்
    (4) கைப்பிரதிகள், சுவரொட்டிகள் மூலம் கல்வியூட்டுதல்
    (5) ஒவ்வொரு வீடுவீடாகச் சென்று விளக்கம் தருதல்

22. ஆளிடைத் தொடர்பாடலுக்குப் **பொருத்தமற்ற** கூற்றாக அமைவது
    (1) இருவருக்கிடையிலான தொடர்பாடல் வழிமுறையாகும்.
    (2) சில வேளைகளில் தொழினுட்பக் கருவிகள் பயன்படுத்தப்படும்.
    (3) தொடர்பியலாளருக்கும் பெறுநருக்கும் இடையே நேரிடையான உறவுநிலை காணப்படும்.
    (4) எதிர்வினைகளும் பின்னூட்டமும் தாமதமாகக் காட்டப்படும்.
    (5) மின்னஞ்சலும் கூட இந்த நோக்கத்தில் பயன்படுத்தப்பட முடியும்.

23. கீழ்வருவனவற்றுள் வெகுசனத் தொடர்பாடலின் முக்கியத்துவம் **குறைந்த** செயற்பாடாகப் பட்டியற்படுத்தப்படுவது
    (1) புதிய தலைமுறைக்குப் பண்பாட்டைக் கையளிப்பது
    (2) அவசியமேற்படும் இடங்களில் பண்புசார் (qualitative) பார்வை நோக்கை உருவாக்குவது
    (3) சூழலினை பார்வைக்குட்படுத்தியிருப்பது
    (4) உறவுகளைக் கட்டியெழுப்ப உதவுவது
    (5) பெறுநர்களின் தேவைகளுக்கு இசைவாக மட்டும் இயங்குவது

24. பொதுவாழ்க்கை முறை (common life style) தொடர்பில் ஒரு விழுமிய அமைப்பொழுங்கின் தேவையை மக்களுக்கு அறிவுறுத்தும் ஊடகப் பணியோடு தொடர்புடையது
    (1) பரப்புரை (propoganda)
    (2) சுய எண்ணக்கரு (self-concept)
    (3) சமூகமயமாதல்
    (4) ஆழ்பரிவு (empathy)
    (5) பார்வை நோக்கு

[பக். 4 ஐப் பார்க்க

25. கீழே தரப்பட்ட பதங்கள் வழியாக வெளிப்படுத்தப்படும் மொழி வகைகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒழுங்கைக் குறிப்பிடுக.

A - நிறுத்தக் குறிகள், மொழிநடை, பொருத்தமான மரபுகள்
B - தனிப்பட்ட பார்வை நோக்கின் தேவை, கருத்தியல் (ideology)
C - சந்தம் (rhythm), வேகம் மற்றும் மொழிநடையின் விசேடத்துவங்கள்

(1) எழுதுதல், நடித்தல், பேசுதல்
(2) பேசுதல், மீளாய்வுசெய்தல், எழுதுதல்
(3) நடித்தல், பேசுதல், எழுதுதல்
(4) எழுதுதல், மீளாய்வுசெய்தல், பேசுதல்
(5) மீளாய்வுசெய்தல், எழுதுதல், நடித்தல்

26. மக்கள் தமது தேவைகளைப் பூர்த்திசெய்ய முடியாதவிடத்து முரண்பாடுகள் தோன்றுகின்றன. மாஸ்லோ (Maslow) கூடக் குறிப்பிடாத போதும், முரண்பாடுகளுக்கு மக்களை இட்டுச் செல்லும் தேவைகளாக அமைபவை

(1) நடைமுறைத் (current) தேவைகள்
(2) உடலியற் தேவைகள்
(3) பாதுகாப்புத் தேவைகள்
(4) சமூகத் தேவைகள்
(5) தன்னிறைவுத் தேவைகள் (Self actualization)

27. பின்வருவனவற்றுள் எது எழுத்து, ஒலி-காட்சி மற்றும் காட்சி ஊடகங்களின் அடையாளம் இழிவடைந்து போவதற்கான முக்கிய காரணமாக அமைகின்றது ?

(1) மனித-சமூக வளர்ச்சி
(2) ஊடகப் படைப்பாற்றலின் கலைத்துவ இயல்புகள் வளர்ச்சியடைதல்
(3) ஊடகத் தொழினுட்பத்தின் வளர்ச்சி
(4) ஊடக நிறுவனங்களுக்கு இடையிலான போட்டி
(5) ஊடக ஒழுக்கநெறிகளினதும் சட்ட வரையறைகளினதும் விளைவு

28. தற்போதைய உலகில் ஊடகங்களைக் கண்காணிப்பதற்கு மிகவும் வினைத்திறனுள்ள வழிமுறை

(1) ஒழுக்கநெறிக் கோட்பாடுகள்
(2) சட்ட வரையறை
(3) ஊடக வழக்காறுகள் (conventions)
(4) மரபு
(5) சந்தை

29. அங்கீகரிக்கப்பட்ட தொலைக்காட்சி மெய்மை நிகழ்ச்சிகளின் (reality television programme) தொடர்ந்துவரும் இயல்பாக அமைவது

(1) நேரடி நிகழ்ச்சிகள்
(2) அதிக செலவீட்டுடனான நிகழ்ச்சிகள்
(3) மிகப் பிரபல்யமான நிகழ்ச்சிகள்
(4) எழுத்துருவோ படத்தொகுப்போ தேவையற்றவை
(5) இளையோரை முழுமையாக இலக்கு வைப்பவை

30. ஒரு சமூகத்தில் வர்க்க வேறுபாடு அதிகம் இழிவளவாக்கப்படுவதை ஊக்குவிக்கும் பண்பாட்டு வகைமாதிரி


(1) நாட்டாரியல் பண்பாடு
(2) வெகுசன ஊடகப் பண்பாடு
(3) செம்மைப் பண்பாடு
(4) இனப் பண்பாடு
(5) பாரம்பரியப் பண்பாடு

31. உலகமயமாதல் வழிமுறையின் பிரதான இயல்பாக அமைவது

(1) நாடுகடந்த நிறுவனங்களின் உருவாக்கம்
(2) மூடப்பட்ட இனத்துவம் (closed ethnicity)
(3) பண்பாட்டுப் பாதுகாப்பு இயல்பு (cultural protectionism)
(4) தேசிய, குடும்ப விழுமியங்களுக்கு முன்னுரிமை வழங்குதல்
(5) நிராகரிக்கப்படும் தொழினுட்பவிய வளர்ச்சி

[பக். 5 ஐப் பார்க்க

● கீழே தரப்பட்ட வரிப்படத்தைப் பயன்படுத்தி **32** முதல் **34** வரையான வினாக்களுக்கு விடை எழுதுக.




32. மேலே தரப்பட்டது ஒரு தொடர்பாடல் சூழல் எனக் கற்பனை செய்க. R உம் S உம் இரண்டு நபர்கள் ஆவதுடன் P யும் Q வும் அவர்களிடையே பரிமாறப்பட்ட செய்திகள் ஆகும். முதற் தடவையாக Q ஆனது S இனைச் சேரும்போது S இனது செயற்பாடுகள் X, Y, Z எனும் ஒழுங்கில் வகைகுறிக்கப்படுவது முறையே
   (1) குறிமுறையாக்குதல் (encoding), குறிமுறையவிழ்த்தல் (decoding), பின்னூட்டம் (feedback)
   (2) குறிமுறையவிழ்த்தல், வழிமாற்றம் (interpretation), குறிமுறையாக்குதல்
   (3) பின்னூட்டம், குறிமுறையவிழ்த்தல், குறிமுறையாக்குதல்
   (4) வழிமாற்றம், பின்னூட்டம், குறிமுறையாக்குதல்
   (5) குறிமுறையாக்குதல், வழிமாற்றம், பின்னூட்டம்

33. P ஆனது R இனை அடையும்போது இடம்பெறுவது
   A - S இனால் Q நிராகரிக்கப்பட்டதா என அறிய வாய்ப்புண்டு.
   B - Q கொண்டிருக்கும் குறியீடுகள் பொருத்தமற்றவையா என அறிய வாய்ப்புண்டு.
   C - நேர்வழித் தொடர்பாடல் (linear communication) R இற்கும் S இற்கும் இடையே இடம்பெற்றதா என்பதைப் பார்வையிட வாய்ப்புண்டு.
   D - R இனால் சொல்லப்பட்ட அதே செய்தியை S எடுத்துக் கொண்டாரா என அறிய வாய்ப்புண்டு.

   மேற்குறித்த கூற்றுகளில்
   (1) A, B மற்றும் C ஆகியன மட்டும் உண்மையானவை.
   (2) B, C மற்றும் D ஆகியன மட்டும் உண்மையானவை.
   (3) A, B மற்றும் D ஆகியன மட்டும் உண்மையானவை.
   (4) A, B, C, D ஆகிய அனைத்தும் உண்மையானவை.
   (5) A, B, C, D ஆகியவற்றில் எவையும் உண்மையானவையல்ல.

34. தரப்பட்ட வரிப்படத்தில் உள்ள சூழலை ஒத்த தொடர்பாடல் மாதிரியொன்றை அறிமுகப்படுத்தியவர்
   (1) வில்பர் ஷ்ராம் மற்றும் ஹரோல்ட் லாஸ்வெல்
   (2) குளோட் ஷெனொன் மற்றும் வொரன் வீவர்
   (3) டேவிட் கே. பெர்லோ மற்றும் சார்ள்ஸ் ஒஸ்கூட்
   (4) சாள்ஸ் ஒஸ்கூட் மற்றும் வில்பர் ஷ்ராம்
   (5) வொரன் வீவர் மற்றும் சார்ள்ஸ் ஒஸ்கூட்

35. ஊடகக் கல்வியறிவு தொடர்பான திறமையாகக் கொள்வதற்கு அதிகம் கடினமானது
   (1) ஊடக உள்ளடக்கத்தைக் கையாளும் அறிவு
   (2) ஊடக உள்ளடக்கத்தை உருவாக்கும் திறன்
   (3) ஊடக உள்ளடக்கத்தை மதிப்பிடும் ஆற்றல்
   (4) ஊடக உள்ளடக்கத்தை ஆராயும் திறமை
   (5) ஊடக உள்ளடக்கத்தை நுகர்வதற்கான விருப்பு

36. நீங்கள் ஒரு வன்மையான செய்திக்கு (hard news) தலைப்பை இடுவதற்கு **குறைந்தளவில்** தேவைப்படும் தகவல்
   (1) சம்பவத்துடன் தொடர்புடைய நபர் மற்றும் சம்பவம் நடந்த இடம்
   (2) என்ன சம்பவம் மற்றும் அதற்கான காரணம்
   (3) சம்பவம் நடந்த இடம் மற்றும் தொடர்புடைய நபர்
   (4) சம்பவம் நடந்த விதம் மற்றும் காரணம்
   (5) சம்பவம் நடந்த நேரம் மற்றும் சம்பவம் நடந்த விதம்

[பக். 6 ஐப் பார்க்க

37. ஊடக விளம்பரங்கள் தொடர்பான **பொருத்தமற்ற** கூற்றைத் தெரிவுசெய்க.
   (1) பொதுச் சேவையை வழங்குதல்
   (2) சமூகத்தில் தொடர்பைக் கட்டியெழுப்புதல்
   (3) மக்களின் சிந்தனையை மாற்றுதல்
   (4) வர்த்தகத் தேவையை நிறைவுசெய்தல்
   (5) கட்டாயமான பண்புசார் பார்வை நோக்கு

38. பல்லினப் பண்பாடுகளுடன் கூடிய பார்வையாளர்கள் மத்தியில் பேச்சாளர் ஒருவர் உரையாற்றும்போது, அவர் அவசியம்
   A - சைகைகள் குறித்த பண்பாட்டு அர்த்தங்களைத் தெரிந்திருக்க வேண்டும்.
   B - இன மையப் பேச்சைத் தவிர்க்க வேண்டும்.
   C - தனது கருத்தை அழுத்திச் சொல்ல வேண்டும்.

   மேற்குறித்த கூற்றுகளில்
   (1) A மட்டும் சரியானது.
   (2) A யும் B யும் மட்டும் சரியானவை.
   (3) A யும் C யும் மட்டும் சரியானவை.
   (4) B யும் C யும் மட்டும் சரியானவை.
   (5) A, B, C ஆகிய அனைத்தும் சரியானவை.

39. 'உங்களது கைத்தடியை வீசிச் செல்லும் உங்களது உரிமை அடுத்த நபரின் மூக்கு ஆரம்பிக்கும் இடத்தில் முடிவடைகின்றது.' இக்கூற்று மிகவும் பொருத்தமாகப் பிரயோகம் அடையக்கூடியது
   (1) தேசிய உணர்வுடன்
   (2) ஊடக சுதந்திரத்துடன்
   (3) ஊடகக் கல்வியறிவுடன்
   (4) ஊடக சுதந்திரம் மற்றும் பொறுப்புணர்வுடன்
   (5) ஊடகத் தணிக்கையுடன்

40. வாய்மொழியல்லாத் தொடர்பாடல் குறித்து ஒரு தொகுதி மாணவர்கள் வெளியிட்ட கருத்துக்கள் வருமாறு:
   ரொஷான் - வாய்மொழித் தொடர்பாடல், வாய்மொழியல்லாத் தொடர்பாடல் இரண்டுமே குறியீட்டுத் தன்மை கொண்டவை.
   மது - வாய்மொழியல்லாத் தொடர்பாடல் நிபந்தனைகளால் கட்டுப்படுத்தப்படுவதல்ல.
   ரவி - முயற்சியின்றி வாய்மொழியல்லாத் தொடர்பாடல் இடம்பெறும்.
   சரத் - வாய்மொழியல்லாத் தொடர்பாடல் பண்பாட்டு அடிப்படையிலானது.

   வாய்மொழியல்லாத் தொடர்பாடல் தொடர்பில் சரியான கூற்றுகளை வெளியிட்டவர்கள்
   (1) ரொஷான் மற்றும் மது
   (2) மது, ரவி, மற்றும் சரத்
   (3) ரொஷான் மற்றும் சரத்
   (4) மது, சரத் மற்றும் ரொஷான்
   (5) ரொஷான், மது, சரத் மற்றும் ரவி

41. ஊடகச் செயற்பாட்டைப் பாதிக்கக்கூடிய வேறுபட்ட காரணிகளைக் கொண்ட சில குழுக்கள் கீழே தரப்படுகின்றன.
   A - ஊடக உரிமையாளர், சட்டம், சுய கட்டுப்பாடு
   B - விளம்பரதாரர்கள், பெறுநர்கள், ஊடக மூலங்கள்
   C - ஊடக நிறுவனங்கள், அரசு, ஊடகவியலாளர்கள்

   இவற்றுள் ஊடகத் தொழிற்பாட்டுடன் தொடர்புடையவை உள்ளடக்கப்பட்டிருப்பது
   (1) குழு A இல்
   (2) குழுக்கள் A இலும் B இலும்
   (3) குழுக்கள் A இலும் C இலும்
   (4) குழுக்கள் B இலும் C இலும்
   (5) A, B, C ஆகிய சகல குழுக்களிலும்

42. சமூக ஒருங்கிருத்தலையும் ஒருமைப்பாட்டையும் வளர்ப்பதற்கு உதவ **முடியாத** ஒரு பண்பாட்டுப் போக்கு (cultural trend)
   (1) பண்பாட்டு மாறா எண்ணக்கரு (cultural stereotype)
   (2) பண்பாட்டுச் சுற்றோட்டம் (cultural circulation)
   (3) பண்பாட்டுப் பரிமாற்றம் (cultural exchange)
   (4) பண்பாட்டுப் பரவுகை (cultural diffusion)
   (5) பண்பாட்டு விருத்தி (cultural cultivation)

43. ஒரு நாட்டின் பேண்தகு நீடித்து நிலைத்து நிற்கும் அபிவிருத்தி எனப்படுவது
   (1) விவசாயத்தில் முழுமையான தன்னிறைவு
   (2) கட்டடங்களையும் நெடுஞ்சாலைகளையும் இயலுமான வகைகளிலெல்லாம் அமைத்துக் கொள்ளல்
   (3) சூழலுக்குப் பொருந்தக்கூடிய செயன்முறை
   (4) போக்குவரத்து, தொடர்பாடல், சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்தல்
   (5) உலகமயமாதலுக்கு ஏற்றவகையில் நாட்டின் பொருளாதாரத்தை விருத்தி செய்தல்

[பக். 7 ஐப் பார்க்க

44. தொலைக்காட்சி நிகழ்ச்சிகளுக்கான தரவரிசைப்படுத்தலின் (rating) அடிப்படை
   (1) பார்வையாளரின் எண்ணிக்கை
   (2) நிகழ்ச்சியின் கால அளவு
   (3) நிகழ்ச்சிக்கான செலவினம்
   (4) பங்கேற்கும் கலைஞர்களின் எண்ணிக்கை
   (5) நிகழ்ச்சி மூலமான வருமானம்

45. செய்தி மூலங்கள் தொடர்பான சில அவதானிப்புகள் கீழே தரப்படுகின்றன.
   A - செய்தியை உருவாக்குவதில் அவை பங்கெடுக்கின்றன.
   B - பின்னூட்டச் செயன்முறையை ஆதரிக்கின்றன.
   C - ஒரு சம்பவம் தொடர்பில் பல்வேறு தகவல்களை வழங்குகின்றன.
   D - தொடர்பியலாளரின் பண்பாட்டுப் பின்புலத்தை அடையாளம் காண உதவுகின்றன.
   மேற்குறித்த கூற்றுகளுள் சரியானவை
   (1) A யும் B யும் மாத்திரம்
   (2) A யும் C யும் மாத்திரம்
   (3) A யும் D யும் மாத்திரம்
   (4) B யும் D யும் மாத்திரம்
   (5) C யும் D யும் மாத்திரம்

46. க.பொ.த. (உ/த) மாணவர்கள் தொடர்பான வானொலிச் செய்தியொன்றைக் கேட்ட பின்னர், கமல் அதனை ரவிக்குச் சொல்ல நினைத்து, ஒரு தொலைபேசி அழைப்பு மூலம் அதனை மேற்கொண்டான். இங்கு குறிப்பிடப்பட்ட தொடர்பாடல் வகைகளின் ஒழுங்குமுறை
   (1) ஒலி, அகமுகித் தொடர்பாடல், ஆளிடைத் தொடர்பாடல்
   (2) அகமுகித் தொடர்பாடல், ஆளிடைத் தொடர்பாடல், கூட்டுத் தொடர்பாடல்
   (3) வெகுசனத் தொடர்பாடல், கூட்டுத் தொடர்பாடல், ஆளிடைத் தொடர்பாடல்
   (4) வெகுசனத் தொடர்பாடல், அகமுகித் தொடர்பாடல், ஆளிடைத் தொடர்பாடல்
   (5) ஆளிடைத் தொடர்பாடல், கூட்டுத் தொடர்பாடல், வெகுசனத் தொடர்பாடல்

47. ஒரு நிறுவனம் வெளியகப் பொதுசனத் தொடர்பை (external public relations) வெற்றிகரமாகப் பேணுவதில் மிக முக்கிய காரணியாக இருப்பது
   (1) அனுசரணைகள், இலவசமாக தொடர்புகொள்ளக்கூடிய தொலைபேசி இலக்கம், இணையத்தளம்.
   (2) வருடாந்தச் சுற்றுலா, நலன்புரி அமைப்புக்கள், அனுசரணைகள்
   (3) அனுசரணைகள், இணையத்தளம், ஊழியர்களின் ஒன்றுகூடல்கள்
   (4) இலவசமாகத் தொடர்புகொள்ளக்கூடிய தொலைபேசி இலக்கம், வருடாந்தச் சுற்றுலா, செய்தி மடல்
   (5) செய்தி மடல், ஊழியர்களின் ஒன்றுகூடல், அறிவித்தல் பலகை

48. ஓர் ஊடகத்தில் இடம்பெறும் விமர்சனம், ஒரு விமர்சகருக்கு அல்லது மதிப்பீட்டாளருக்கு முக்கியமானது. ஏனெனில்
   (1) படைப்பிற்கு பிரபல்யத்தைப் பெற்றுத்தருகிறது.
   (2) பெறுநர்கள் மத்தியில் நல்லுறவைக் கொண்டு வருகிறது.
   (3) பண்புசார் பின்னூட்டத்திற்கான வாய்ப்பை உருவாக்குகிறது.
   (4) சக விமர்சகர்களுடன் / மதிப்பீட்டாளர்களுடன் போட்டியிடும் சந்தர்ப்பத்தை வழங்குகிறது.
   (5) எப்போதும் உடனடிப் பின்னூட்டத்தைத் தருகிறது.

49. செய்தி பற்றிய **தவறான** கூற்றைத் தெரிக.
   (1) முக்கியமான, தலையாய ஒவ்வொரு சம்பவமும் செய்தியாக முடியும்.
   (2) செய்தி என்பது ஒரு சம்பவமல்ல. அது சம்பவம் பற்றியதொரு அறிக்கை.
   (3) ஒரு சம்பவம் செய்தியாக வேண்டுமானால் அதனைச் செய்தியாளர் கட்டாயம் அவதானித்திருக்க வேண்டும்.
   (4) ஒரு செய்தி எப்போதும் புறவயமானது (objective).
   (5) ஒரு செய்தி நேயர்களைச் சேர்வது வாயில்காப்புப் பொறிமுறையில் தங்கியிருக்கிறது.

50. வேறுபட்ட மூன்று முரண்பாடுகள் தொடர்பிலான கீழ்வரும் கூற்றுகளில் இருந்து மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.
   A - நீங்கள் செய்தது சரியென எண்ண வேண்டாம். நான் அதற்கு எதிரானவன்.
   B - என்ன திரைப்படத்தை நாம் பார்க்க வேண்டும் என முடிவு செய்வது கடினமானது. இன்றைக்கு ஒரு படத்திற்கும் போகாதிருக்கலாம்.
   C - நாம் இருவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய இடத்தை நாம் எட்டியிருக்கிறோம் என நான் நினைக்கின்றேன்.
   மேற்குறித்த சூழ்நிலைகள் தொடர்பிலான எடுத்துக்காட்டுகள் வருமாறு:
   (1) A - வெற்றி - வெற்றி, B - வெற்றி - தோல்வி, C - தோல்வி - தோல்வி
   (2) A - வெற்றி - வெற்றி, B - தோல்வி - தோல்வி, C - வெற்றி - தோல்வி
   (3) A - தோல்வி - தோல்வி, B - வெற்றி - தோல்வி, C - வெற்றி - வெற்றி
   (4) A - வெற்றி - தோல்வி, B - தோல்வி - தோல்வி, C - வெற்றி - வெற்றி
   (5) A - வெற்றி - தோல்வி, B - வெற்றி - வெற்றி, C - தோல்வி - தோல்வி

* * *

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2013 අගෝස්තු
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2013 ஓகஸ்ற்
General Certificate of Education (Adv. Level) Examination, August 2013

නව නිර්දේශය
புதிய பாடத்திட்டம்
New Syllabus

සන්නිවේදනය හා මාධ්‍ය අධ්‍යයනය II
தொடர்பாடல், ஊடகக் கற்கை II
Communication and Media Studies II

29 T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

**அறிவுறுத்தல்கள்:**

* **ஐந்து** வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக. ஒவ்வொரு வினாவின் விடைக்கும் **20 புள்ளிகள்** வழங்கப்படும்.

**1.** (i) ஆளிடைத் தொடர்பாடலின் (interpersonal communication) இயல்புகள் **நான்கைப்** பெயரிடுக.

(ii) வானொலி ஊடகத்தில் மொழியைக் கையாளும்போது அவசியம் கவனம் செலுத்த வேண்டிய அம்சங்கள் **நான்கைப்** பெயரிட்டு, அவற்றுள் **இரண்டைச்** சுருக்கமாக விவரிக்குக.

(iii) பிரசித்தமான பண்பாட்டின் (popular culture) **நான்கு** அடிப்படை இயல்புகளைப் பெயரிட்டு, அவற்றுள் **இரண்டைச்** சுருக்கமாக விவரிக்குக.

(iv) உலகமயமாக்கல் சமூகத்தில் கொண்டுள்ள தாக்கம் பற்றிய **நான்கு** விடயங்களை உதாரணங்களுடன் விளக்குக.

**2.** தொடர்பாடல் வழிமுறையின் ஒரு முக்கியமான இயல்பாக அறிமுகப்படுத்தப்பட்ட காலந்தொட்டு, தொடர்பாடலின் 'கணித மாதிரி' தொடர்பாடல் துறையில் குறிப்பிடத்தக்கதாயிருந்து வருகிறது. அதுபோலவே, ஊடகத் தகவல் எவ்வாறு பரவுகை செய்யப்படுகிறது என்பதை விளக்கியது முதற்கொண்டு 'இரண்டு படிநிலை மாதிரி'உம் (two step model) தொடர்பாடல் துறையில் கவனத்தைப் பெற்றிருக்கிறது.

(i) தொடர்பாடலின் கணித மாதிரியின் மிகவும் தலையாய தொடர்பாடல் அங்கத்தைப் பெயர் குறிப்பிட்டு, அதன் **இரண்டு** வகைப்பிரிப்புக்களினதும் பெயர்களைத் தருக.

(ii) ஷ்ராம் ஒஸ்கூட் தொடர்பாடல் மாதிரியின் முக்கிய **இரண்டு** அம்சங்களான குறிமுறையாக்கம், குறிமுறையவிழ்ப்பு ஆகியவற்றைத் தனித்தனியாக விவரிக்குக.

(iii) வெகுசன ஊடகங்களால் வழங்கப்பெறும் தகவல் எவ்வாறு பெறுநர்களை நோக்கிப் பரவுகை செய்யப்படுகிறது என்பதை இரண்டு படிநிலை மாதிரியைக் கொண்டு, வரிப்படமொன்றைப் பயன்படுத்தி விளக்குக.

(iv) இரண்டு படிநிலை மாதிரிக்கு எதிரான, பிரசைகள் இதழியலின் (Citizen Journalism) **நான்கு** முக்கிய இயல்புகளைத் தனித்தனியாக விவரிக்குக.

**3.** தனித்துவம் வாய்ந்த கம்பனி ஒன்றின் வரவேற்பு நிலைக்குச் சமீபமான அறிவிப்புப் பலகையில், 'இம்மாதத்திற்கான சிறந்த ஊழியர்' எனப் பெயரிடப்பட்ட புகைப்படமொன்று அனைவரது கவனத்தையும் ஈர்க்கும் வண்ணம் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது.

(i) மேற்குறித்ததைத் தவிர்ந்த, உள்ளகப் பொதுசனத் தொடர்பின் (internal public relations) **நான்கு** வழிமுறைகளைப் பெயரிடுக.

(ii) பொதுசனத் தொடர்புத் துறையில் செல்லிடத் தொலைபேசிகளின் **இரண்டு** பயன்களையும் இணையத் தளங்களினது **இரண்டு** பயன்களையும் சுருக்கமாக விவரிக்குக.

(iii) பொதுசனத் தொடர்பை விளம்பரத் துறையிலிருந்து வேறுபடுத்தி நிற்கும் முக்கிய அம்சத்தைப் பெயர் குறிப்பிட்டு, நுகர்வோருக்கு விளம்பரங்கள் வழியே கிடைக்கும் **ஐந்து** பயன்களைச் சுருக்கமாக விவரிக்குக.

(iv) வெளியகப் பொதுசனத் தொடர்பில் புகைப்படங்களைப் பயன்படுத்தக் கூடிய **நான்கு** வழிகளை உதாரணங்களுடன் விளக்குக.

[பக். 2 ஐப் பார்க்க

**4.** பாடசாலையின் ஆண்டு விழாவுக்கு ஒவ்வொரு வகுப்பு மாணவர்களும் ஒரு படைப்பாக்கத்தை அளிக்க வேண்டுமென சங்க அலுவலர்கள் முடிவு செய்ததோடு, ஊடகங்கள் வழியாக பரந்ததொரு பிரசித்தத்தை இந்த நிகழ்வுக்கு வழங்குவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

(i) ஒன்றிணைந்து பணியாற்றும்போது அவசியம் செயற்படுத்த வேண்டிய **நான்கு** பண்புகளைப் பெயரிடுக.

(ii) ஊடகங்களுக்கு விளக்கமளிக்கும்போது கவனத்தில் கொள்ள வேண்டிய **நான்கு** அம்சங்களைப் பெயரிட்டு, அவற்றுள் **இரண்டு** அம்சங்களின் முக்கியத்துவம் தொடர்பில் சுருக்கமாக விவரிக்குக.

(iii) நாட்டாரியலின் **நான்கு** வடிவங்களைப் பெயர் குறிப்பிட்டு, அவற்றுள் **இரண்டை** எவ்வாறு இந்த விழாவுக்காகப் பயன்படுத்தலாம் என்பதை விளக்குக.

(iv) செயலாளர் என்ற முறையில் நீங்கள் இந்த விழாவுக்குப் பின்னர் நடைபெறவிருக்கும் பொதுக்கூட்டத்தில் சமர்ப்பிப்பதற்காக, அறிக்கையொன்றைத் தயாரிக்க வேண்டியுள்ளது. இந்த அறிக்கையில் உள்ளடக்குவதற்கு நீங்கள் எதிர்பார்க்கும் குறித்த விழா பற்றிய **நான்கு** அம்சங்களை விளக்கமாக விவரிக்குக.

**5.** வானொலி நேர்காணல் ஒன்றில் பங்கேற்ற துறைசார் நிபுணர்கள் சிலர், இலங்கை ஊடகங்களின் அறிக்கையிடலில் வன்முறை தொடர்பான சம்பவங்களுக்கு அதிகம் இடம் வழங்கப்படுவதாகத் தெரிவித்தனர்.

(i) வானொலி நேர்காணல் ஒன்றுக்குத் தயாராகும்போது, நேர்காண்பவர் அதிக கவனஞ் செலுத்த வேண்டிய **நான்கு** முக்கிய அம்சங்களைப் பெயரிடுக.

(ii) தொலைக்காட்சி ஊடகம் வழியாக வன்முறை எடுத்துக்காட்டப்படும் வழிகள் **இரண்டை** உதாரணங்களுடன் விவரிக்குக.

(iii) ஊடகச் செய்திகளைப் புரிந்துகொள்வதற்கு ஊடகக் கல்வியறிவு அவசியமானது. இந் நோக்கத்திற்காகத் தேவைப்படும் தொடர்புடைய திறன்கள் **மூன்றைச்** சுருக்கமாக விவரிக்குக.

(iv) ஊடகப் பண்பாட்டால் சமூகத்தில் ஏற்படும் விளைவுகள் பற்றிய **நான்கு** அம்சங்களை அடிப்படையாகக் கொண்டு கட்டுரையொன்று வரைக.

**6.** (i) கிளை மொழியின் (dialect) **நான்கு** குணாதிசயங்களை எடுத்துரைக்குக.

(ii) தொடர்பாடலின் பணிகள் (functions) **நான்கைப்** பெயர் குறிப்பிட்டு, அவற்றுள் **இரண்டு** பற்றிச் சிறுகுறிப்புகள் எழுதுக.

(iii) இணையம் எவ்வாறு ஏனைய ஊடகங்களிலிருந்து வேறுபடுகின்றது என்பதைச் சுட்டிக்காட்டும் **நான்கு** வழிகளை எடுத்துரைத்து, அவற்றுள் **இரண்டு** தொடர்பில் விளக்கம் தருக.

(iv) வெகுசனத் தொடர்பாடல் செயன்முறையில் வாயில்காப்புடன் தொடர்புறும் **நான்கு** நபர்களைப் பெயரிட்டு, குறித்த துறையில் அவர்களின் வகிபங்கு பற்றி விபரிக்குக.

**7.** (i) அபிவிருத்தித் தொடர்பாடலில் (development communication) ஈடுபடும் ஊடகவியலாளர் ஒருவர் பல்வேறு திறன்களைத் தன்வசம் கொண்டிருக்க வேண்டியவர் ஆகின்றார். அவற்றுள் **நான்கைப்** பெயரிடுக.

(ii) பிராந்திய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் மக்களுக்கு அறிவூட்டுவது முக்கியமானதாகும். இந் நோக்கத்திற்காகப் பயன்படக்கூடிய **நான்கு** நுட்பங்களைச் சுருக்கமாக எடுத்துரைக்குக.

(iii) அபிவிருத்தித் திட்டத்தில் சமூகப் பங்கேற்பு முக்கியமானதொரு அம்சமாகும். இவ்வாறான முயற்சியை வெற்றிகரமாக மேற்கொள்வதற்கு உதவக்கூடிய **மூன்று** வழிமுறைகளை விளக்குக.

(iv) அபிவிருத்தித் திட்டமொன்று தொடர்பில் முடிவுகள் எட்டப்படுவதென்பது பல கட்டங்களைக் கொண்டதாகும். அந்தச் செயன்முறையின் அடிப்படையான **நான்கு** கட்டங்களை விபரமாக எடுத்துரைக்குக.

* * *